**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 40/2019</u>**

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய ரங்கபாஷ்யம் **PW1.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 06.03.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | ரங்கபாஷ்யம் | | |
| Father /Husband Name | : | ராமசாமி | Court | : |
| Village | : | பொன்செய் | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 70/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

வாதி பிரதிவாதிக்கு எதிராக மயிலாடுதுறை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 274/2017 என்ற வழக்கில் தாக்கல் செய்த வழக்குரையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அசல் வழக்கு எண். 274/2017 என்ற வழக்கில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 28.08.2018 வாதி நாகப்பட்டிணம் மாவட்ட துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில கொடுத்த புகாருக்கான ரசீது அசல் **வா.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 31.08.2018 வாதி நாகப்பட்டிணம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில கொடுத்த புகாருக்கான ரசீது அசல் **வா.சா.ஆ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

04.09.0977 தேதியில் வாதிக்கும் அவரது சகோதரர்களுக்கும் வாதியின் தகப்பனார் ராமசாமி நாயுடு எழுதிவைத்த உயில் சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.